DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :135/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -3 (LW -3)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.பாண்டி | Caste | : | |
| Father Name | : | திரு.நல்லுசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **22.07.2026.**

**PW -3 (LW - 3)**

(எதிரிகள் ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது திருச்சி மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். திருச்சி மாநகராட்சி பகுதி Code No: 591–ல் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 04.10.2024 அன்று காலை 11.45 மணிக்கு 1–வது எதிரி மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் புகையிலை பாக்கெட்டுகளை அதாவது ஹான்ஸ் 28 பாக்கெட்டுகள், கூல்லிப் 14 பாக்கெட்டுகள் ஆகியவற்றை 2–வது எதிரி அலுவலகத்தில் கட்டை பையில் வைத்திருந்ததை நாங்கள் கண்டுபிடித்து போலீசார் வசம் ஒப்படைத்தோம். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

II ADJ COURT TRICHY

IIT ADI COURT TRICHY

**எ.த.கு.வி** :

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் சொன்னீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | வழக்கமாக சோதனைக்கு செல்லும் பொழுது எந்த பகுதிக்கு செல்கிறோம் என்பதை பாக்கெட் டைரியில் எழுதுவது வழக்கம் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அன்றைய தினம் நீங்கள் 1–வது எதிரிக்கு சொந்தமான பெட்டி கடைக்கு காலை 06.00 மணிக்கு சோதனைக்கு சென்றீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அந்த சமயத்தில் 1–வது எதிரி பெட்டி கடையில் எந்தவிதமான புகையிலை பொருட்களும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | 2–வது எதிரி அலுவலகத்தில் கட்டை பையில் கைப்பற்றியதாக சொல்லும் நேரத்தில் அக்கம் பக்கத்தில் இருந்த அலுவலர்களை அழைத்து கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் எந்த ஆவணமும் தயாரிக்கவில்லை, எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் காவல் நிலையத்திற்கு சொன்ன தகவலின் பேரில் போலீஸ்காரர்கள் அந்த அலுவலகத்திற்கு காவலர்கள் வந்துவிட்டார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அப்போதே போலீசாரிடம் புகையிலை பொருட்களையும், எதிரிகளையும் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டீர்கள் என்றால்? |
| **பதில்** | சையது இப்ராஹிம் என்பவர் புகார் அளித்தார். |
| **கேள்வி** | போலீசார் அலுவலகத்திற்கு வந்த பொழுதே அங்கு வைத்து சையது இப்ராஹிம் புகார் கொடுத்தாரா? |
| **பதில்** | இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். |
| **கேள்வி** | நீங்கள் காவல் நிலையம் சென்றீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | அ.சா.1 புகார் கொடுத்த பொழுது உங்களை விசாரித்தார்களா? |

| | |
|---|---|
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அதற்கு பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக உங்களை போலீசார் விசாரிக்கவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அன்றைய தினம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கட்டை பையை அப்படியே போலீசாரிடம் ஒப்படைத்து விட்டீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அந்த கட்டை பையில் எழுதப்பட்டிருந்ததா? அதன் நிறம் என்ன என்றால்? |
| **பதில்** | மஞ்சள் நிறம். என்ன எழுதப்பட்டிருந்தது என தெரியவில்லை. |
| **கேள்வி** | நீங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் 2–வது எதிரி அலுவலகத்தில் எந்தவித பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 22.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,
இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி: 22.07.2026

HI ADJ COURT, TRICHY